## EASTERN UNIVERSITY, SRI LANKA
## FACULTY OF COMMERCE AND MANAGEMENT
## THIRD YEAR FIRST SEMESTER EXAMINATION IN BBA/ ECONOMICS 2003/ 2004
## (DECEMBER 2004)
## ECN 3024 MONETARY ECONOMICS

251
Eastern University, Sri Lanka

சகல வினாக்களுக்கும் விடை தருக. நேரம் 03 மணித்தியாலங்கள்

01. a. பணத்தின் பிரதான பணிகள் எவை?

(02 புள்ளிகள்)

b. அப் பணிகளில் எவை கடன் அட்டைகள் மூலம் திருப்தி செய்யப்படலாம் என்று நீர் எண்ணுகின்றீர்?

(02 புள்ளிகள்)

c. "பணத்திற்கான பாதுகாப்பு நோக்கக் கேள்வி" என்ற பதத்திலிருந்து நீர் விளங்கிக் கொள்வது யாது?

(04 புள்ளிகள்)

d. "ரோபினின் கருத்துப்படி பகுத்தறிவான செயற்பாடு தனிநபர் ஒருவரை பணம், பத்திரங்கள் ஆகிய இரண்டையும் உள்ளடக்கிய செல்வத் தொகுதி ஒன்றினை வைத்திருப்பதற்குத் தூண்டுகின்றது". ஆராயக.

(12 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

02. a. "கேள்வித் தூண்டற் பணவீக்கம்" என்ற பதத்தினை விளக்குக.

(04 புள்ளிகள்)

b. நாணயக் கணியக் கொள்கை என்பதே மிகப் பழைய பணவீக்கக் கோட்பாடாகும். பிஷர், கேம்பிரிட்ஜ், ஆகிய இரண்டு கணியக் கோட்பாடுகளிலும் எது சிறந்தது என்று நீர் கருதுகிறீர்? ஏன்?

(08 புள்ளிகள்)

c. ஒரு பொருளாதாரத்தின் பணவீக்கத்தை அளவிடுவதில் நிறையளிக்கப்பட்ட சராசரி விலைச்சுட்டியானது எந்தளவிற்குப் பயனுடையது?

(04 புள்ளிகள்)

d. புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட இலங்கை நுகர்வோர் விலைச்சுட்டியானது எவ்வழிகளில் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டியின் குறைபாடுகளை நீக்குகின்றது? விளக்குக.

(04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

03. a. நாணயக் கொள்கை என்பதன் கருத்தினை விளக்குக.

(04 புள்ளிகள்)

b. நாணயக் கொள்கையுடன் தொடர்புடைய நிறுவனத்தினை இனங்காண்பதுடன் அந்நிறுவனம் எவ்வாறு நாணயக் கொள்கையை அமுல் செய்கின்றது என்பதனையும் விளக்குக.

(04 புள்ளிகள்)

c. இலங்கையின் நாணயக் கொள்கையின் அண்மைக்காலப் போக்குகளை எடுத்துக்கூறி விளக்குக.

(12 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

04. a. இலங்கையில் செயற்பட்டுவரும் வணிக வங்கிகள் அல்லாத நான்கு வகையான வைப்புக்களை ஏற்கும் நிறுவனங்களைக் குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

b. "இலங்கையின் வங்கித்துறையானது இன்று பொதுமக்களுக்கு அதிகமான செயற்பாடுகளை வழங்குதல், மற்றும் பலவகைப்பட்ட சேவைகளை வழங்குதல் என்ற வகையில் வேகமாக வளர்ச்சியடைந்துள்ளது". விளக்குக.

(08 புள்ளிகள்)

c. பொருளாதா தாராளமயப்படுத்தலுக்குப் பின்னர் இலங்கையில் வங்கி சாராத நிதியியல் நிறுவனங்களின் அபிவிருத்தியை விளக்குக.

(08 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

05. a. "பொருளாதாரத்தின் மொத்தப் பண நிரம்பலானது மத்தியவங்கி, வர்த்தக வங்கிகள், மற்றும் பொதுமக்கள் ஆகியவற்றின் கூட்டு நடத்தை மூலம் தீர்மானிக்கப்படுகின்றது". விளக்குக.

(08 புள்ளிகள்)

b. "வங்கித்தொழில் முறைமையின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் (NFA) 2003ம் ஆண்டில் மேலும் அதிகரித்தது. இது $M_2b$ இன் வளர்ச்சிக்குப் பிரதான பங்களிப்புக் காரணியாக இருந்தது". இலங்கையில் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களின் வளர்ச்சிக்குப் பின்னணியில் இருந்த காரணிகள் எவை?

(04 புள்ளிகள்)

c. வெளிநாட்டு நாணயமாற்றுச் சந்தையின் பின்வரும் அம்சங்களை விளக்குக.

i. உடனடி வீதம்

ii. குறுக்கு வீதங்கள்

iii. முன்னோக்கிய வீதங்கள்

iv. இலாபம் (Spread)

(08 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)